**GOVERNMENT ARTS AND SCIENCE COLLEGE PAPPIREDDIPATTI**

*Affiliated to Periyar University, Salem-11.*

*(Recognized Under Section 2(f) & 12(B) of UGC Act, 1956)*

**Dharmapuri - 636905, Tamilnadu, India.**

**Website: www.gascprp.in phone: 04346-246212**

## தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு மையத்தின் தொடக்க விழா

**இடம்:** திருவள்ளுவர் திறந்தவெளி கலையரங்கிம் **தேதி:** 16–10–2023

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு மையத்தின் தொடக்க விழா 16.10.2023) நடைபெற்றது. இவ்விழாவிற்கு வருகை புரிந்த அனைவரையும் முனைவர் கோ.ஐயப்பன், கணிதத் துறைத்தலைவர், ஒருங்கினைப்பாளர், தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு மையம் அவர்கள் வரவேற்றார். கல்லூரியின் முதல்வர் முனைவர் வே.அன்பரசி, தலைவர் தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு மையம் அவர்கள் தலைமை தாங்கி தலைமையுரையாற்றினார். முன்னதாக முனைவர் வீ.ரவி, இயற்பியல் துறைத் தலைவர், உறுப்பினர் தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு மையம் அவர்கள் சிறப்பு விருந்தினர் அவர்களை அறிமுகம் செய்து வைத்தார். திரு வே.கால்டுவெல், நிறுவனர் ERP Logic, Dallas–USA அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு "கனவு திறவுகோல்" எனும் தலைப்பில் தன்னுடைய வாழ்க்கை பற்றியும், அறிவை எவ்வாறு தேவையான இடத்தில் தேவையான நேரத்தில் பயன்படுத்த வேண்டும் என்று செய்முறை விளக்கத்தோடு எடுத்துரைத்தார். மேலும், நட்பை எவ்வாறு உறவாக மாற்றி கொள்ள வேண்டும் என்றும் நான் கூறிய அனைத்தையும் பின்பற்றினால் தொழில் முனைவோராகலாம் என்று கூறி சிறப்புரையாற்றினார். இறுதியாக தமிழ்த் துறைத்தலைவர் முனைவர் டி.க.சித்திரைச்செல்வி, ஆலோசகர் தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு மையம் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். இவ்விழாவில் அனைத்து துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். மேலும், இவ்விழாவினை கணிதத்துறை விரிவுரையாளர் முனைவர் பா.ராஜா, அவர்கள் தொகுத்து வழங்கினார்.

# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி மாவட்டம் - 636 905.

## தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுமையம்

### தொடக்க விழா

நாள் : 16.10.2023 நேரம் : முற்பகல் 10.30 மணி

இடம் : திருவள்ளுவர் திறந்தவெளிக்கலையரங்கம்

### நிகழ்ச்சி நிரல்

தமிழ்த்தாய் வாழ்த்து

குத்துவிளக்கு ஏற்றுதல்



வரவேற்புரை : முனைவர் **கோ. ஐயப்பன்**
கணிதத்துறை தலைவர்,
ஒருங்கிணைப்பாளர்,
தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுமையம்.



தலைமையுரை : முனைவர் **வே.அன்பரசி**
முதல்வர்
தலைவர்,
தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுமையம் .



சிறப்பு விருந்தினர் அறிமுகம் : முனைவர் **வீ.இரவி**
இயற்பியல்துறைத் தலைவர்.
உறுப்பினர்,
தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுமையம்.



சிறப்புரை : திரு. **வே.கால்டுவெல்**
நிறுவனர்
ERP Logic - Crunchbase, Dallas - USA
"கனவு திறவுகோல்"



நன்றியுரை : முனைவர் **டி.க. சித்திரைச்செல்வி**
தமிழ்த்துறைத் தலைவர்
ஆலோசகர்,
தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டுமையம்.

நாட்டுப்பண்



தொகுப்புரை : முனைவர் **பா. ராஜா**
கணிதத்துறை விரிவுரையாளர்.

குறிஞ்சி
டிஜிட்டல் பாப்பிரெட்டிப்பட்டி
94442 55846










அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி


அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி


அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி





# பாப்பிரெட்டிப்பட்டி அரசுக் கல்லூரியில் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி



பாப்பிரெட்டிப்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் திங்கள்கிழமை நடைபெற்ற தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சியில் பங்கேற்றோர்.

**அரூர், அக். 16:** பாப்பிரெட்டிப்பட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி திங்கள்கிழமை நடைபெற்றது.

இந்தப் பயிற்சி முகாமில் கல்லூரி முதல்வர் வே.அன்பரசி தலைமை வகித்தார். அமெரிக்காவைச் சேர்ந்த தொண்டு நிறுவனர் வே.கால்டுவெல், 'கனவு திறவுகோல்' எனும் தலைப்பில் தொழில் முனைவோர் மேம்பாடு குறித்த பயிற்சிகளை வழங்கினார்.

இதில், தொழில் முனைவோர் மேம்பாட்டு மைய ஒருங்கிணைப்பாளர் கோ.ஐயப்பன், இயற்பியல்துறைத் தலைவர் வீ.ரவி, தமிழ்த் துறைத் தலைவர் டி.க.சித்திரைச்செல்வி, விரிவுரையாளர் பா.ராஜா மற்றும் கல்லூரிப் பேராசிரியர்கள் கலந்துகொண்டனர்.